முருகப்பெருமான் துணை

**மகான் ஏனாதிநாத நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.05.2024,** திங்கட்கிழமை

1. அருட்பெருஞ் சுடரேற்றி ஞானம்
அகிலத்தார் அடைய வேண்டி
அருட்தயவாய் அருளும் தவசியே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே குரோதி தகர் திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி சோமவாரம்
(குரோதி வருடம் சித்திரை மாதம் 23 ம் நாள், 06.05.2024, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
தேசிகனுக்கு ஏனாதிநாத நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயர் நெறி தரும நெறிபடவே
ஞானநெறி காட்டும் அரங்கன்
நன்னெறி விட்டு அகலா மக்கள் வர
4. வருகவே பிறப்பில் வினைவழி
வகையிலா குணம் கண்டாலும்
ஆறுமுக அரங்கன் ஆசியாலும்
அருளமுது உண்ணும் பாக்கியத்தாலும்
5. ஆதலால் தன்வினை விலகி
ஆசாபாச சுயநல செயல்பாடு
பூதலத்தில் தொடராது விலகி
புண்ணிய பலத்தின் மகிமை அறிந்து
6. அறிந்து உணர்ந்து தேறி
அரங்கன் வழி ஞானபலம்
அறிந்துமே அழியாமை தேடும்
ஆற்றல் மிக்கவர்களாகத் தேறி
7. தேறியே தேசிகனை தொடர்ந்து
தொண்டனாக அன்னதான சேவை
தேறியும் தருமசாலைகள் பல
தேசமெங்கிலும் துவக்கியே

8. துவக்கியே தரும சேவை வளர்த்து
தெரிவிப்பேன் உலக பசிப் பிணி
அவனியில் விரட்டி மீட்கின்ற
ஆற்றல் மிக்கவர்களாகத் தேறி

9. தேறியே அரங்கன் தேற்றும்
தெய்வபலமிக்க தருமவான்களாக
மாறுதல் புரிகின்ற ஞானிகளாக
மண்ணுலகில் அற்புதம் படைப்பர்

10. படைக்கவே அரங்கன் நோக்கம்
பாருலகில் பண்பான தலைமை
படைத்து ஞான ஆட்சித் தரும்
பாலதண்டாயுதன் அவதாரம் ஆகும்

11. ஆகவே உலகோர் அடிபணிய
அரங்கமகான் வழி சரணடைய
செகமாற்றம் மட்டுமல்ல யுகமாற்றமும் ஆகத்தேறி
செப்பிடுவேன் அற்புதம் நிகழும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–